முரசொலி

ஆசிரியர் : மு. கருணாநிதி

முரசு : 5 | 27–8–59 | வெள்ளி | ஒலி : 44

திருவாளர் தேசீயம் பிள்ளை!

4

காந்தி, தழுதழுத்த குரலில் தொடர்ந்து பேசலானர்:

"என்னை இங்கே அனுப்பிவைப்பதற்கு நீங்கள் எல்லாம் பட்டபாடு கொஞ்சமா? உங்களோடு இருந்தால் நீங்கள் செய்கிற அக்கிரமங்களைத் தட்டிக் கேட்கிறேன்—தடுத்து நிறுத்தப் பார்க்கிறேன் என்ற வெறுப்பில் என்னைப் பாதுகாப்பதற்குக்கூட அக்கறை எடுத்துக் கொள்ளநாதியில்லை. வெள்ளைக்காரன் வைத்துவிட்டுப் போன பலமான ராணுவம் இருந்தது. அதுவும் போதாதென்று படை பலத்தைக் கோடி கோடியாகச் செலவிட்டுப் பெருக்கினீர்கள். எத்தனை இருந்தென்ன; பொட்டென்று முடித்துவிட்டான் காரியத்தை! இங்கே "சொர்க்கத்திலே" சொல்லொணு வேதனையில் உழன்று கொண்டிருக்கிறேன்.

"என்னைத்தான் துரத்தினீர்களே; பாவிகளே! என்னுடைய ஆசைக்கும் அன்புக்குமுரிய உடைமைகளைக்கூடக் கொள்ளைக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டீர்களாமே!

"நான் வாழ்ந்த குடிசையை எழில் மிகுந்த இருட்டு மண்டபமாக மாற்றிக் கட்டி அந்த மண்டபத்திற்குள்ளே வௌவால்களைத் தோரணமாகத் தொங்கவிட்டிருக்கிறீர்களாம்! பணக்காரப் பச்சோந்திகளைத் தாழ்வாரமெங்கும் விளையாட விட்டிருக்கிறீர்களாம்! 'வான்கோழி'களை மண்டபத்து முற்றத்திலே ஆடவிட்டு, கொள்கையற்ற கோட்டான்களின் இசை முழங்கச் செய்திருக்கிறீர்களாம்! கொம்பு மாடுகளைக் கொழுப்பேறு மட்டும் வளர்த்து ஒன்றேடொன்று முட்டிக் கொண்டு மண்டபத்தைப் போர்க்களமாக ஆக்கியிருக்கிறீர்களாம்!

"அட பாவிகளே; நான் நவகாளிப் பயணத்தின் போது ஊன்றிக் கொண்டு நடந்த அருமை மிகு கைத்தடி, "மோஸஸ்" கதையிலே வருவதுபோல் பாம்பாக மாறி பாட்டாளி மக்களைக் கடித்துக் கொல்லுகிறதாம்! அப்படியொரு மந்திரத்தைப் போட்டுவிட்டீர்களாம்!

[தொடர்ச்சி பக்கம்—4]

மனிதனின் கதை

பி.சி. கணேசன்

30. சீன யாத்ரீகன் ஹுவான் - சுவாங்

அன்புள்ள மாதவி,

குப்த வம்சத்தின் கடைசி மன்னன் பாலதித்யன். அவனுக்குப்பின் குப்த ராஜ்யம் இருந்த இடம் தெரியாமல் நசித்துப் போயிற்று! தெற்கே புலிகேசி நிறுவிய சாளுக்கிய சாம்ராஜ்யம், கடல் கடந்தும் வாணிபம் செய்து கொண்டிருந்தது.

இக்காலத்தில் கனோஜ், ஒரு சிறந்த தலைநகரமாக உருவாகிக் கொண்டிருந்தது. கவிஞர்களும், கலைஞர்களும், தத்துவ ஞானிகளும், துறவிகளும் அந்நகரை அலங்கரித்தனர். அந்நகரைத் தலைநகராகக் கொண்டுதான் ஹர்ஷ சாம்ராஜ்யம் வளர்ந்தது.

சூழ்நிலைகளால் உந்தப்பட்டு, ஒரு ராஜ்யத்தைக் கட்டியவன் ஹர்ஷன். கனோஜில் ஆண்ட மன்னனை ஹுணர்கள் படுகொலை செய்துவிட்டு, அவன் மனைவி ராஜஸ்ரீயைக் கடத்திச் சென்றனர். இதனால் வெகுண்டெழுந்த ராஜஸ்ரீயின் சகோதரன் ராஜவர்த்தனன், சிறைப்படுத்தப்பட்ட சகோதரியை மீட்க ஹுணர்களின்மீது படையெடுத்தான். ஆனால் அவனும் துரோகிகளால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டான். அதற்குப்பின் அவனுடைய இளைய சகோதரன் ஹர்ஷவர்த்தனன், சகோதரியைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். காடுமேடெல்லாம் சகோதரியைக் காணாமல் சுற்றியலைந்தபின் அவளைக் கண்டான். எந்த நிலையில்? 'கணவனை இழந்தோருக்குக் காட்டுவது இல்' என்ற நிலையில்! அப்பொழுது வடநாட்டில் இருந்த வழக்கப்படி, தீக்குளிக்கத் தயாராக இருந்த ராஜஸ்ரீயை, ஹர்ஷன் கண்டான். சில விநாடிகள் அவன் தாமதமாக வந்திருந்தாலும் அவள் தீக்கிரையாகியிருப்பாள். உரிய நேரத்தில் வந்து ஹர்ஷன் அவளைக் காப்பாற்றினான். சகோதரியின் பரிதாப நிலை வஞ்சம் தீர்க்கும் உணர்ச்சியை அவன் மனத்தில் உண்டாக்கியது. சகோதரியை விதவையாக்கி, சகோதரனையும் கொன்றவர்களைப் போரிலே வென்று பழி தீர்த்துக் கொண்டான். தொடர்ந்து நாடுபல வென்றான். வடக்கே ஒரு சாம்ராஜ்யம் உருவாகி ஹர்ஷ சாம்ராஜ்யம் என்ற பெயரையும் பெற்றது.

வாள்முனையால் வடநாட்டில் பேரரசு கட்டிய ஹர்ஷன், தனது வாளின் வலிமையைத் தெற்கேயும் பரிசோதிக்க எண்ணினான். விந்தியத்தின் விளிம்பிலே தென்னகத்தின் வீரம் பளிச்சிட்டது. இரண்டாம் புலிகேசி என்ற இரண களச்சூரன் ஹர்ஷனைப் போரிலே வென்றான். உருவிய வாளோடு போர் முரசு கொட்டித் தெற்கே திக்விஜயம் புறப்பட்ட ஹர்ஷன், தோற்றுப்போய் உறையிலிட்ட வாளோடு வட நாடு திரும்பினான்!

ஹர்ஷன் ஒரு காவலன் மட்டுமல்ல; பாவலனுங்கூட! காவியங்கள் பல புனைந்தான். எண்ணற்ற கலைவாணர்களைப் போற்றினான். பௌத்தமதத்தை அவன் தழுவினான். அசோகனுக்குப் பிறகு பௌத்த மதம் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்தது இவன் காலத்தில்தான். ஆனால் பௌத்த மதம் தன் அடிப்படைப் பாதையிலிருந்து விலகி, ஆரிய நெறியின் பல கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு, 'மகாயானம்' என்ற புதுப் பெயரோடு உலவியது! பௌத்த மதத்தைக் கடைபிடித்த கடைசி இந்திய மன்னனும் ஹர்ஷன்தான்!

இவன் காலத்தில் நாலந்தாவில் இருந்த பௌத்த பல்கலைக் கழகம் பிரக்யாதி பெற்று விளங்கியது. வெளிநாட்டிலிருந்து பலர் பௌத்த நெறி பயில இப்பல்கலைக் கழகத்துக்கு வந்தனர். இக்காலத்தில்தான் சீன யாத்ரீகன் ஹுவான்-சுவாங் இந்தியாவில் வந்து பதினான்கு ஆண்டுகள் தங்கி பௌத்த ஸ்தலங்களை தரிசித்தான்; பௌத்த மத ஏடுகளைச் சேகரித்தான். அவன் நாலந்தா பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருபத்திஆறு வயது இளைஞனாக ஹுவான்-சுவாங் சீனாவிலிருந்து புறப்பட்டான். இளமை முறுக்கும் எழில்மிகு தோற்றமும் கொண்டவனாக அவனை வரலாற்று ஏடுகள் வர்ணிக்கின்றன. பிரயாண வசதிகள் சிறிதும் இல்லாத அக்காலத்தில் அறிவு பெறும் ஆவலுடன் ஒரு இளைஞன் பல்லாயிரக் கணக்கான மைல்கள் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது நாடுபல சுற்றி விஷயங்களைச் சேகரித்தான் என்றால், அதை எண்ணியெண்ணி வியப்பதைத் தவிர நாம் வேறென்ன செய்யமுடியும்? அவன் எழுதி வைத்துப்போன குறிப்புகளிலிருந்துதான் பல மக்களின் நாகரிகம், பழக்க வழக்கங்கள், ஆட்சிமுறை, நாட்டு நடப்பு ஆகியவற்றை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

சீனாவிலிருந்து புறப்பட்ட ஹுவான்—சுவாங் கோபி பாலைவனத்தைக் கடந்து இந்தியா வந்துசேர்ந்தான். டாஷ்கண்டு, சாமர்கண்டு, யார்க்கண்டு முதலான நகரங்களுக்கும் அவன் விஜயம் செய்தான். டர்ஃபான் நாட்டில் இந்திய, பாரசீக, மங்கோலிய, சீன நாகரிகங்கள் ஐக்யமடைந்த ஒரு கலப்பு நாகரிகத்தை ஹுவான்—சுவாங் கண்டான். ஏந்திழைகளுக்கும் இசை வல்லுனர்களுக்கும் பெயர்போன கௌக்கா (Kaucha) நாட்டைப் பார்த்து பரவசமடைந்தான், ஹுவான் — சுவாங். அவனுடைய வரலாற்றுக் குறிப்புக்களில் கண்ட காட்சிகளோடு கேட்ட கதைகளையும் அவன் எழுதி வைத்திருக்கிறான். அவனுடைய குறிப்புக்களில் எண்ணற்ற கற்பனைக் கதைகள் புத்தருடைய வாழ்க்கையைப்பற்றிக் காணப்படுகின்றன. இக் கதைகள் அக்காலத்தில் கர்ண பரம்பரையாக மக்களிடத்திலே வழங்கி வந்திருக்க வேண்டும்.

நாலந்தா பல்கலைக் கழகத்தில் மாணவர்களும் பௌத்தத் துறவிகளும் பத்தாயிரம் பேர் இருந்ததாக அவனுடைய குறிப்புக்களிலிருந்து நாம் அறிய முடிகிறது, பனாரிஸ் நகரம் (முன்பு காசி என்றும், இப்பொழுது வாரணாசி என்றும் அழைக்கப்படும் நகரம்) ஆரியக் கல்வியைப் பரப்பும் பீடமாக இருந்ததாகவும் தெரிகிறது. இந்தியாவைப் பற்றியும் இந்திய மக்களைப்பற்றியும் ஹுவான்—சுவாங் சொல்லியுள்ளதைக் கீழே சுருக்கமாகக் கொடுத்திருக்கிறேன்:

இந்தியர்கள் நேர்மையானவர்கள்; கண்ணியமானவர்கள்; வெள்ளை மனம் படைத்தவர்கள். பண விஷயத்தில் மிகவும் ஒழுங்கானவர்கள். சொன்ன சொல் தவறாதவர்கள். வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டுபவர்கள். இனிமையாகப் பழகுகிறார்கள். குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கிறது. அடிமைகள்போல் யாரிடமும் இவர்கள் கட்டாய வேலை வாங்குவதில்லை. வரிகள் மிகக் குறைவாகவே போடப் படுகின்றன. விவசாயிகள் ஆறில் ஒரு பங்கை அரசாங்கத்துக்குக் கடமையாகச்செலுத்தி விடுகின்றனர். ஆண்களும் பெண்களும் இளம்பிராயத்திலிருந்தே கல்வி கற்கின்றனர் ஐவகை சாத்திரங்களும் அவர்களுக்கு முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. அவையாவன: 1. இலக்கணம் 2. கலை, கைத்தொழில் நுணுக்கங்கள் 3. மருத்துவம் 4. தர்க்கம் (Logic) 5. தத்துவம்.

இந்திய மக்களுக்குக் கல்வி கற்பதில் இருந்த ஆர்வம் ஹுவான்—சுவாங்கைப் பிரமிக்க வைத்தது. அவனுடைய குறிப்பு முழுவதும் இந்த ஆச்சரியம் இழையோடி நிற்கிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பிரயாகையில் நடக்கும் கும்ப மேலா விழாவிற்கு ஹர்ஷன் நேராக விஜயம் செய்வது வழக்கமென்று ஹுவான்—சுவாங்கின் குறிப்புக்கள் சொல்லுகின்றன. இதிலிருந்து ஹர்ஷன் பௌத்தமதத்தை ஆதரித்தாலும் இந்துக்களிடமும், அவர்களுடைய மதத்திடமும் நிரம்ப மரியாதை வைத்திருந்தான் எனத் தெரிகிறது. அவன் கும்ப மேலாவிற்கு வரும்பொழுது ஒரு லட்சம் யாத்ரீகர்களுக்கு விருந்தளித்து உபசரித்தான் என்று அவ் விழாவில் கலந்து கொண்ட ஹுவான்-சுவாங் அறிவிக்கிறான்.

இந்துக்கள் நோய் வந்தால் மருந்து சாப்பிடுவதில்லையென்றும், ஏழுநாள் பட்டினியிருந்தும் நோய் தீராவிட்டாலேயே மருந்து உட்கொண்டனர் என்றும் அந்தச் சீன யாத்ரீகன் குறித்து வைத்திருக்கிறான். இந்தியா முதலான பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தபின் ஹுவான் சுவாங் தாய்நாடு திரும்பினான். இளைஞனாகப் புறப்பட்டுப்போய் அனுபவமும் அறிவும் நிரம்பப் பெற்ற முதியவனாகத் திரும்பிய ஹுவான் சுவாங்கை சீனச் சக்ரவர்த்தி மிகுந்த மரியாதையுடன் வரவேற்றான்.

ஹுவான் சுவாங்கால் நாம் ஹர்ஷனைப்பற்றி நிறையத் தெரிந்து கொள்ளுகிறோம். உணவுக்காகப் பிராணிகளைக் கொல்லுவதை நாட்டில் ஹர்ஷன் தடை செய்ததால், பார்ப்பனர்கள் புலால் உண்பதைக் கைவிட்டு, மரக்கறி உணவு உட்கொள்ள ஆரம்பித்தனர் என்று நேரு, தான் எழுதிய உலக வரலாற்றில் குறிப்பிடுகிறார்.

ஹர்ஷன் கி. பி. 648—ல் இறந்து போனான்!

ஷார்லமேன், ஹருன்—உல் ரஷீத், சீனச்சக்கரவர்த்தி டாய்—சுங், ஹர்ஷவர்த்தனன் ஆகியோர் ஏறக்குறைய ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் பலம் பெற்ற அரசர்களாக விளங்கி, பல சிறு நாடுகளை ஒன்றாக்கிப் பேரரசு நிறுவி ஆண்டார்கள். இவர்களுக்குப்பின் பலம்பொருந்திய மன்னர்கள் அந்நாடுகளில் தோன்றாமல் போகவே, நாடுகள் சிற்றரசுகளாகப் பிரிந்து, சிற்றரசர்கள் பலம் பெற்ற பிரபுக்களை நம்பி ஆட்சி செலுத்தினர். பல விவசாயிகள் ஒரு பிரபுக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். இந்த நிலவுரிமைப் பிரபுத்வ முறையைத்தான் வரலாற்றில் 'ஃப்யூடலிசம்' (Feudalism) என்று அழைக்கிறோம். இதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பின்னர் விளக்குவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

வெள்ளி 27—3—59 சென்னை

கண் திறப்பீர்; கடை திறப்பீர்!

விழிகளை மறைக்கும் விநோத சக்தி படைத்தவை படர்ந்து வரும் காரிருள்—பறந்து வரும் தெருப்புழுதி என்பார்கள். ஆனால் பதவி எனும் தொழு நோயால் தாக்கப்பட்டவர்கள்கூட பாமரர்கள் படுகின்ற இன்னல்—இடையூறுகளைப் பார்க்கமுடியாத அளவுக்கு பார்வையிழந்து விடுகின்ற காட்சியை இந்தக் காங்கிரஸ் அரசு நமக்கு எடுத்தியம்புகிறது!

நிலாமுகங்களில் நீர்த்திவலைகள்—

மாடுபோல் உழைத்ததால் மேடாகிய முதுகு—

—இத்தகைய 'புருக்கூடுவாசி'கள், இருதயப் புண்ணை ஆற்றிக்கொள்ள மருந்து தேடி மாய்கிறார்கள்.

அந்தப் புண் ஆற்ற வேண்டாம்; புன்னகை காட்டவேண்டாம்; புலிபோல் பாய்ந்து எலிபோல் வாழ்கின்றவர்களின் அவல வாழ்க்கையையுமா பிய்த்தெறியவேண்டும்?

ஒரு நாளை ஓட்டுவது என்பது உயிர் பிரிந்து மீள்வது போன்ற நிலை இந்தத் தமிழகத்துச் சிறிய வியாபாரிகளுக்கு! பணம் கொடுத்துப் பொருள் எடுத்து, மீண்டும் அப்பொருள் பணமாவதற்குள் அவர்கள் நெருப்பாற்றைத் தாண்ட வேண்டும்; நீர்வீழ்ச்சியைக் கடக்க வேண்டும்!

முள் முனையிலே வாழ்க்கை நடத்தும் அந்தச் சமுதாயத்தின் வயிற்றிலடிக்கும் வரி விதிப்பொன்றை வழக்கம்போல் வளையாத தன்மையுடன்—விளைவை நினையாத பண்புடன் நிறைவேற்றுகிறது, சென்னை அரசு!

அழுகும் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்—என்கிற தமிழகத்து பல்லாயிரக் கணக்கான வியாபாரிகளின் கோரிக்கை சென்னை கோட்டைக்கு எதிரிலுள்ள உப்புக் கடலிலே கரைக்கப்பட்டுவிட்டது!

நலிவு போக்கவேண்டிய அரசு, தங்கள் நலன் குலைக்கும் கொடுமை கண்டு வலம் வந்தனர் வியாபாரிகள், நகரெங்கும். 'எங்கள் கேட்டைக் களைவீர்!' என்று குரல் எழுப்பியோர் கோட்டைக்குள் நுழைய முடியாது தடுக்கப்பட்டனர்!

ஆகவேதான் தமிழகமெங்குமுள்ள அழுகும் பொருள் வியாபாரிகள் அழுதழுது சிந்துகின்ற கண்ணீர் துடைக்கப்படாததால், கடையடைப்பு செய்திருக்கின்றனர், மார்ச் 25 முதல்!

அங்காடிக் கூடைகள் மூலையிலே தூக்கி எறியப்பட்டுவிட்டன, 'அன்றாடங் காய்ச்சி'களின் வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்!

மார்க்கெட்டுகள் மூடிக்கொண்டன; சந்தைகள் வெற்று வெளியாகிவிட்டன!

சென்னை நகரைப் பொறுத்தவரையில் காய்கறிகள், பழங்கள், வெங்காயம், இறைச்சி, கிழங்கு வகைகள் போன்ற வரி விதிப்பில் சிக்கிய பொருள்களின் விலை விஷம்போல் ஏறிவிட்டது! பொது மக்களின் தவிர்க்கமுடியாத அன்றாடத் தேவைக்கான இப்பொருட்கள் கொஞ்சம் கொஞ்சம் வெளியில் வருகின்றன. சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்காத 'கள்ள மார்க்கெட்' பெருச்சாளிகள் ஒன்றுக்குப் பத்தாக விலை குறித்து விற்கிறார்கள்!

இதே நிலைதான் தமிழகமெங்கும் நிலவி வருகின்றது என்று கூறுகின்றன ஏடுகள்!

ஆனால் அமைச்சர்களோ 'எத்தனை நாள் நீடித்துவிடப் போகிறது இக் கடையடைப்பு' என்கிற பாணியில் பேசுகிறார்கள். கடைகளைத் திறக்கவேயில்லை என்றால்கூட வேறு வழிகளில் பொருட்கள் விற்பனை செய்ய முயற்சிப்பதாகவும் சொல்கிறார்கள்!

> "கிளர்ச்சி தவறானது! சிறு வியாபாரிகளுக்குப் பரிதாபப்படுவது போல் சிலர் சர்க்காரைப் பழிக்கின்றனர். மிரட்டலுக்குப் பயந்து சர்க்கார் பின்வாங்கப் போவதில்லை. சிறிய வியாபாரிகளை இந்த விற்பனை வரி நிச்சயம் பாதிக்காது; பெரிய வியாபாரிகள்தான் அவர்களை ஏமாற்றித் தவறான வழியில் அழைத்துச் செல்கிறார்கள்...."

— சென்னை, மேல் சபையில் அமைச்சர் வெங்கட்ராமன் கடையடைப்புக்கு இப்படி காரணம் சொல்லியிருக்கிறார்!

ஏமாற்றப்பட்டுவிட்டார்களாம் சிறிய வியாபாரிகள்; எதையும் கேட்பவர்கள்தான் தன் எதிரில் இருப்பவர்கள் என்கிற துணிவில் முழங்கியிருக்கிறார் அமைச்சர்.

ஏமாற்றப்பட்டதாலா கொதித் தெழுந்திருக்கிறார்கள், பல்லாயிரக் கணக்கான வியாபாரிகள்? புதிய வரி விதிப்பினால் வாழ்க்கை பறிபோய் விடுமே என்ற பயம்தான் அவர்களை ஒன்றாக்கியிருக்கிறது; ஒருசேர எதிர்ப்புக் குரல் கொடுக்கச் செய்திருக்கிறது!

சிறிய வியாபாரிகளின் கண்களை மறைக்கும் கருத்துக்கு இவ்வித விளக்கம் ஒன்றைத் தருகிறார் அமைச்சர். ஆண்டொன்றுக்கு ரூ. **30,000**—த்திற்குமேல் வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் வரி விதிக்கப்படுகிறது என்கிறார். அதற்குக் கீழே வியாபாரம் செய்பவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு உண்டாம்!

அதாவது தினம் ஒன்றுக்கு ரூ. **82**—க்குக் குறைவாக வியாபாரம் செய்பவர்களுக்கு வரி விதிப்பு கிடையாது—என்கிறது இந்த வரி விதிப்புக் கொள்கை!

ஆனால், இதற்கான கணக்கு வைத்துக் கொள்வது சுலபமல்லவே! கணக்கை சரிபார்க்கும் விற்பனை வரி அதிகாரிகளுக்கு விளக்கம் கிடைப்பதும் அரிதாயிற்றே!

கல்லூரியிலேயிருந்து பட்டம் பெற்றவனா சாலையோரத்திலே கடை வைத்திருக்கும் கருப்பன்? அல்லது கணிதத்திலே பாண்டித்யம் பெற்ற பச்சையம்மாளா தள்ளு வண்டி எடுத்துத் தெருவில் கூவிச் செல்கிறாள்? புதிய நாணய முறையால் குழம்பிப் போயிருக்கிற அத்தகைய 'தற்குறி'களுக்கு இது பேரிடியைத் தருகின்ற செய்திதான்! செலவுக்கும் வரவுக்கும் கணக்கு வைத்துக் காட்டவேண்டிய அவர்கள், இனி ஆளுக்கொரு கணக்காளர் வைத்துக்கொண்டால்தான் முடியும் என்கிற விசித்திரமான சூழ்நிலையை உண்டாக்கித் தருகிறது, தமிழக அரசு!

இத்தனைக்கும் அத்தகைய அழுகும் பொருள் வியாபாரத்தில் மிகையான லாபம் ஒன்றும் கிடைத்துவிட முடியாது. ஒருநாள் தங்கிப்போன பொருள் மறுநாள் அழுகிப்போனால் ஒரு மாத லாபம் பாழாகிவிடும்; வெப்ப தட்ப நிலைகளுக்கேற்பவும் அத்தகைய பொருட்கள் வீணாகிவிடும்!

தவிர்க்கமுடியாத இத்தகைய தொல்லைகள் இருக்கிற நேரத்தில் எங்கிருந்து வரி கொடுக்கமுடியும் ஏழை வியாபாரிகள்?

பக்கத்திலேயிருக்கும் கேரளத்திலோ — ஆந்திராவிலோ — மைசூரிலோ இத்தகைய வரி ஏதும் விதிப்பதில்லை; ஆனால் ஏழைகளின் இரத்தத்தையே உறிஞ்சி ருசிகண்ட சென்னை அரசினர் மட்டும் திடீரென இந்தத் தீய திட்டத்தைப் புகுத்தியிருப்பது கண்டு வெகுண்டெழுந்துவிட்டனர், வியாபாரிகள்! அவர்கள் மட்டுமேல்ல; கடையடைப்பால் பெருமளவு பாதிக்கப்பட்ட பொது மக்கள் தொடுக்கின்ற கண்டனக் கணைகள் இனியேனும் கோட்டைச் சுவற்றைக் கடந்து, அமைச்சர்களின் பிடிவாதக் கோட்டைத் தகர்க்குமா?

உடைந்துபோன வாள்—

உருக்குலைந்துபோன ரதங்கள்—

ஒற்றைக்கால் குதிரைகள்—

கண்ணிழந்த வீரர்கள்—

இவைகளைக்கொண்டு போர் நடத்தத் துணிகிற அரசனைப் போல், 'வரி விதித்தேன்; வசூலிப்பேன்!' என்று வரட்டுக் கூச்சலிடுகிற சென்னை அரசினர் இனியேனும் நிலையை அறியவேண்டும்; ஏழை வியாபாரிகளின் ஏக்கப் பெருமூச்சிலே மண்டிக் கிடக்கிற உண்மையை உணரவேண்டும்!

தமிழக அரசினரின் இமைக் கதவுகள் திறக்கப்படட்டும்; மூடிக் கிடக்கும் கடைகளின் கதவுகளும் திறக்கப்படட்டும்!

அரசியல் ‘கொலை’கள்!

*

இப்படியும் நடக்குமா?

அரசியல் கண்ணியம் அற்றவர்கள் — கொடுமைக்கு அஞ்சாத கொலை வெறியர்கள் காங்கிரஸ் கூடாரத்திலே மலிந்து விட்டார்களோ என்று எண்ணத்தக்க செய்திகள் வடக்கேயிருந்து வந்துகொண்டே இருக்கின்றன. சௌராஷ்டிரத்திலே நடைபெற்ற நெஞ்சுலுக்கும் அரசியல் கொலையின் விபரம் ஒன்று கீழே தரப்படுகிறது :

★ இம்மாதம் (மார்ச்) முதல் தேதியன்று இரவு, 10 மணியிலிருந்து 11–மணிக்குள் மூலி என்ற நகரில் ஜோபோ பிரதாப்சிங் கோகில் என்ற வாலிபர் பயங்கரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்! சாலையோரத்தில் மண்டை உடைக்கப்பட்டு வீழ்த்தப்பட்டிருந்த அவரது பிணத்தின் மார்பில் துப்பாக்கி குண்டு ஒன்றும் பாய்ந்திருந்ததாம்! காந்தியார் போதித்த அகிம்சையை அவரது மார்பிலே தேடிப் பார்த்தார்களோ என்னவோ; அவருடைய மார்பு ஒரு கோடாலியால் பிளக்கப்பட்டிருந்ததாம்!

இத்தனைக்கும் யார் அந்த இளைஞர்? அந்தப் பகுதியிலே காங்கிரஸ் இயக்கத்தை எதிர்க்கும் எதிர்க்கட்சிகளில் ஒன்றாகிய “நாக்ரிக் மண்டல்” என்ற அமைப்பின் முக்கியமானவர்களில் ஒருவராம்! ஆகவே இந்தக் கொலைக்குக் காங்கிரசார்தான் காரணம் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள்!

கொலை நடந்த பதினைந்து நிமிடங்களுக்கெல்லாம் ஒரு ஜீப் கார் மிக வேகமாக வந்து அந்தப் பிணத்தை அப்புறப்படுத்த முனைந்ததாம்; ஆனால் மக்கள் தலையிட்டால் அம்முயற்சி நடைபெறவில்லை. பின்னர் போலீசார் வந்து தயக்கமுடன் பிணத்தை எடுத்துச் சென்றனராம்.

நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் அன்று ஊரிலில்லை; மேலும் கொலை நடந்த பின் இரு தினங்கள்வரை எந்தவிதமான நடவடிக்கைகளும் போலீசாரால் எடுக்கப்படவில்லை: இரத்தக்கறை தென்படுவதாக ஒரு வீட்டின் முகவரியைத் தந்தபோதுகூட உடனடியாக அதுபற்றி கவனிக்கவில்லை; அந்த இரத்தக்கறையைக் சுரண்டி ரசாயனப் பரிசோதனைக்கும் அனுப்பவில்லை!

தின்கர் மெஹதா என்ற மேல் சபை உறுப்பினர் இந்தக் கொலைக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் அரசியல் அநாகரிகம் பற்றி பம்பாய் முதலமைச்சர் சாவனுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்.

எதிர்க் கட்சிக்காரர்களை கத்தியும், துப்பாக்கியும் கொண்டு அழித்துவிட முடியும் என்கிற காங்கிரசின் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து, 8—3—59 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில், குஜராத் இயக்கத் தலைவர் இந்துலால் யக்னிக் என்பவர் பேசியிருக்கிறார். அந்தக் கூட்டத்திற்கு பம்பாய் மேயர் மிராஜ்கரும் வந்திருந்தாராம்!

உத்தரப் பிரதேசத்தில் ‘உத்தம’ச் செயல்கள்!

நேரு பிறந்த மாகாணமான உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற மற்றும் இரு கொலைகளின் விபரம் கீழே :

★★ 10—3—59 அன்று மாலை, தான் வேலை பார்க்கும் இடத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த ராமசந்திர பர்த்வாஜ் என்ற பொதுவுடமை இயக்கவாதி ஏழு முறை குண்டுகளால் தாக்கப்பட்டார்! அவரது பயங்கரச் சாவுக்குப் பின்னால் அரசியல் எதிர்ப்புதான் மறைந்துகொண்டிருக்கிறது என்கிறார்கள், அந்தப் பகுதியிலிருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்கள். புதான் என்ற மாவட்டத்தில் ஒரு சிற்றூரில் நடைபெற்றிருக்கிறது இது!

★★★ பொதுக் கூட்டம் ஒன்றிற்குச் சென்றுவிட்டு தன் வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த புட்டுசிங் என்பவர் மூன்று குண்டர்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். கர்தோய் மாவட்டத்தைச் சேர்ந்த அவர் அப்பகுதி பிரஜா—சோஷலிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராம்!

26—2—59 அன்று நடைபெற்ற இந்தக் கொலைக்கும் அரசியல் வஞ்சம்தான் காரணம் என்று பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றும் விட்டிருக்கிறது!

—ஆனால், இன்றுவரை மேற்கண்ட இரு கொலைகள் பற்றியும் போலீசார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்!

இதன் ரகசியம் என்ன ?

தேசியம் பிள்ளை...

[முதல் பக்கத் தொடர்ச்சி[

“ என் இடுப்பிலே யிருந்து எடுப்பாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு கெடிகாரம், உங்களால் பத்திரப்படுத்தப் பட்டிருக்கும் என்று எதிர் பார்த்தேன். அந்தக் கெடிகாரத்தை கள்ள மார்க்கெட்காரர்களுக்கு உரிமையாக்கி நேரம் பார்த்துக் கொள்ளையடிக்கச் சொல்லி விட்டீர்களாம்.

“ என் காலணிபட்டு சின்னஞ்சிறு ஜீவன்கள்கூட செத்து விடக்கூடாதேயென்று நான் ஏங்குவேன். இப்போது அந்தக் காலணியை நீங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஆள் மாட்டிக் கொண்டு ஆயிரக் கணக்கான மக்களை அடக்கி, மிதித்து, துவைத்துச் சேருக்கு கிறீர்களாம்!

“ இத்தனை சொத்துக்களையும் கெடுத்தீர்கள். என் வீட்டையும் பாழாக்கினீர்கள். தொலையட்டும்! எல்லாமே போகட்டும். என் மூச்சுப் போன்றதும், என் இருதயம் போன்றதுமான என் அன்புக் குழந்தையாம் “ஹரிஜன நலம்” என்ற செல்வத்தையாவது ஒழுங்காகப் பாதுகாத்திருக்கிறீர்களா? என் இனபக் குழந்தை, “சவலைப் பிள்ளை” போலல்லவா காட்சி தருகிறது. சளியொழுகும் மூக்கு, பருக்கை உதிரும் வாய், தள்ளிய வயிறு, சூம்பிப்போன கால் கைகள், எழுபது வயதுக் கிழங்கள் விடுவது போன்ற இழுப்பு மூச்சு, இவ்வண்ணம் தள்ளாடித் தள்ளாடித் தடுமாறும் நிலையில் அல்லவா நான்பெற்ற மாணிக்கத்தை நடுத்தெருவில், சாக்கடை யோரத்தில், புழுதி மேட்டில் நிர்க்கதியாக விட்டுவிட்டீர்கள்! அந்தச் செல்வம் ஒன்றையாவது காப்பாற்றி யிருக்கக் கூடாதா? அதைக் காப்பாற்றுவதாக வெளி வேஷம் போட்டு மாகாணத்துக்கு ஒரு ‘ஆயாக் கிழவி’யை நியமித்திருக்கிறீர்களாம். அந்தக் கிழவிகள் எல்லாம் கண்ணனைக் கொல்ல வந்த ‘பூதகி’ போலக் காட்சி தருகிறார்களாம். என் குழந்தை ஆதரிக்க ஆளின்றித் தவிக்கிறதாம்!

“ இந்த லட்சணத்தில் உன் அழுக்கேறிய கைகளால் எனக்கு மாலை வேறு போட வந்து விட்டாய்? போ! போ! என் முன் நில்லாதே!”

—காந்தியின் கோபம் எல்லை மீறிவிட்டது.

அப்போது ஒரு ஆள் வேகமாக ஓடி வந்து எமனின் காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான்.

எமன் “ஆ!” என்று அலறி விட்டான்.

“என்ன? என்ன?” என்று கேட்டார் காந்தி!

“ இதோ, இந்தத் தேசியம் பிள்ளை, ஸ்ரீரங்கத்தில் ஸ்வாமி ரங்கநாதரைத் தீயில் போட்டுவிட்டு இங்கு ஓடி வந்து விட்டவனும்!”—எமன் கூச்சல் போட்டான்.

“ஆ! ரங்கநாதரைத் தீயில் போட்டானா? விபரமாகச் சொல்லுங்கள்! விபரமாகச் சொல்லுங்கள்!”—காந்தி பதைபதைக்க கேட்டார்.

“ஆமாம்! இவன் செய்த அக்கிரமங்கள் பொறுக்கமாட்டாமல் ரங்கநாதர் தனக்குத்தானே பற்றியெறிந்துவிட்டாராம். அந்தத் தீ விபத்துக்குக் காரணம் இந்தத் தேசியம் பிள்ளைதான் என்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாம். அங்கே யிருந்தால் ஆபத்து என்று இங்கே ஓடிவந்திருக்கிறான்!”

—என்றவாறு எமன் தேசியம் பிள்ளையை நோக்கித் தன் கதாயுதத்தை ஓங்கினான்.

தேசியம் பிள்ளை, காந்தியின் கால்களைப் பிடித்துக்கொண்டு, “அய்யோ! அபயம்! அபயம்! என்னைக் காப்பாற்றுங்கள்!” என்று கண்ணீர் வடித்தார்.

“எழுந்திரு! எழுந்திரு! என் கால்களைத் தொடாதே! உன் கையிலுள்ள ரத்தக்கறை என் கால்களில் ஒட்டிக் கொள்ளப் போகிறது!” என்றவாறு கைகளை உதறிவிட்டுக் காந்தி எழுந்தார்.

“ஆண்டவனின் கோபத்துக்கு ஆளாகி, அவருக்கே உடம்பு எரிச்சலை உண்டாக்கிவிட்டு தீ விபத்துக்குக் காரணமாகிவிட்ட பரமபாதகனாகிய உனக்கு நரகத்திலும் இடமில்லை! எங்கும் இடமில்லை! உன்னை எப்படி மன்னிக்க முடியும்? எமதர்மராஜனே! தயவு செய்து இவனை அழைத்துப் போங்கள்! கொள்ளிவாய்ப் பிசாசு போன்ற இவன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. என் இஷ்ட தெய்வமான ரங்கநாதரையே தீயில் வேகவைத்த அநியாயக் ஆட்சிக்காரனைப் பார்ப்பது மகாப் பாபம்! உடனே இழுத்துச் சொல்லுங்கள்!”

—காந்தி, எமனிடம் இந்த வேண்டுகோளை வெளியிட்டவாறு நந்தனை அழைத்துக் கொண்டு வேகமாக உள்ளே போய்விட்டார். தேசியம் பிள்ளை எமனையே பார்த்துக் கொண்டு நின்றார்.

எமன் “ம்! நட! நட!!” என்றான். எருமை மாடு, தேசியம் பிள்ளையின் முதுகில் ஒரு முட்டு முட்டித் தள்ளியது.

“எப்பாடி!” என்றவாறு தேசியம் பிள்ளை படிக்கட்டுகளில் உருண்டார்.

உருளுகிறார்! உருளுகிறார்! பல படிக்கட்டுகளில் உருளுகிறார்—உருண்டுகொண்டே யிருக்கிறார்! எமன், அவர் உருளுவதைப் பார்த்துக் கலகலவென சிரிக்கிறான்!

அவர் உருண்ட முதல் படி, கோவைப்படி! அந்தப் படியிலேயே சரியான அடி!

சமாளித்து எழப் பார்த்தார்—அடுத்தபடி ஆம்பூர் படி: அதில் மிகவும் பலத்த அடி!

குடந்தைப்படியிலும் மோசமான இடி!

ஒரு கயிற்றைப் பிடித்து நிமிர்ந்தார்! எழமுடியவில்லை!

மீண்டும் உருளுகிறார்—உருண்டுகொண்டே யிருக்கிறார்!

தொடரும்

"மீன் வாங்கலையோ, மீன்! மீன் சாப்பிடுங்களய்யா, ஊன் பெருகும்; உடல் வளரும்"—என்று வீணைக்குரல் கேட்கிறது!

அந்தக் குரலுக்குரிய கோமளவல்லி யார்? செத்த மீன்கூடையைத் தலை சுமக்க, இடதுகை மடக்கி, இடைமேல் வைத்து, கொடி இடை துவள, கொலுசு கொஞ்ச, நடையழகு காட்டும் கடற்கரை யோரத்து நாடக மயிலா? மீனவர் மங்கையா? நெய்க் கருவாடு விற்கும் தையலம்மையா?

இல்லை! இல்லை! மீன்பற்றித்

★ "மீன் வாங்கலையோ மீன்!" ★

தேன் ஒழுகப் பேசும் இப் பெண்மணி சென்னை ராஜ்ய மீன் வளத் துறைத் தலைவி, அமைச்சர் லூர்தம்மாள் சைமன் அவர்கள்!

ஐய்யோ! உப்புத் தடவின உயிர்களை விற்கும் அம்மணி என்றல்லவா நினைத்தோம். அபச்சாரம்! அபச்சாரம்! உப்புச் சத்தியாக்கிரகம் செய்த 'அகிம்சை' பக்தர்களின் பெண்பால் அமைச்சரல்லவா இவர்?

அரைப்படி அரிசிக்குச் சமமாக விற்கும் கெண்டை மீனை உண்டால் திடகாத்திரம் ஏற்படும் என்று அகிம்சைக் கொள்கையை மறைவிடத்தில் வைத்து விட்டு மீன் பிரச்சாரத்திலிறங்கியிருக்கிறார், நாஞ்சில் நாடு தந்த நல்ல அம்மையார்!

அமைச்சரவையில் மீன் தின்னுதவர் ஒரிருவர்தான் இருக்கலாம். நம் முதலமைச்சர் இந்த 'உயிர்ப் பிராணி உணவில்' ரொம்பப் பிரியமுள்ளவர்!

இருந்தும் என்ன செய்ய?—மீன் பிடிக்கும் தொழில் நாளுக்கு நாள் கட்டெறும்பு தேய்ந்து சுள்ளெறும்பு ஆன கதையாகத்தான் இருக்கிறது.

★

மீன் பிடிக்கும் துறைகளென இருப்பவை சென்னை மாநிலத்தில் பலப்பலவாகவிருந்தாலும் மாட்சிமை தங்கிய மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மீன் பிடிக்கும் துறைகள் மூன்றுதானாம்.

ஒன்று—சென்னை;

இரண்டு—கூடலூர்;

மூன்று—நாகப்பட்டினம்.

அப்படி அங்கீகரிக்கப்பட்ட மீன் பிடிக்கும் துறைகளிலும் இரண்டு துறைகளுக்குப் பட்டை நாமம் சாத்தப்பட்டிருக்கிறது. சென்னையும் நாகையும் கைவிடப்பட்டது. கூடலூர் ஒன்றுதான் கைபிடிக்கப்பட்டிருக்கிறது, டில்லி ஏஜமானனால்! என்னய்யா அநியாயம் என்று இங்கிருக்கிற அமைச்சர்கள் 'துணிந்து' கேட்டதற்கு முன்பே கருணை கூர்ந்து வடபுரி சாம்ராஜ்யப் பெருமக்கள் அதற்குக் காரணம் தந்திருக்கிறார்கள்.

"சரியான முறையில், கூடலூரைத் தவிர, மற்ற அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்களில் மீன் பிடிக்கப்படுவதில்லை. அப்படிப் பிடித்தாலும், வருவாய் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது குறைவாகவே இருக்கிறது. ஆகவே கூடலூரில் மட்டும் வசதிசெய்து தருகிறோம். மேலும் அந்நிய நாட்டுச் செலாவணி காரணமாக மீன் பிடிக்கும் தொழிலை தெற்கே விஸ்தரிக்க முடியாது!"

—இந்த விளக்கத்தைக் கேட்ட நம்ம அமைச்சர்கள் '4 துண்டு சங்கரா மீன் வறுவல்' சாப்பிட்ட மகிழ்ச்சியை அடைந்திருப்பார்கள்.

ஆனால் அந்த டில்லி எஜமானர்கள் கூறியது காரண விளக்கமல்ல! காமராஜர் சர்க்காரின்மேல் வீசப்பட்ட கணைகளாகும். அந்தக் குற்றச்சாட்டு மேலும் நீளுகிறது.

"இந்த சென்னை அரசாங்கத்து மீன் பிடிக்கும் இலாகாவிற்கென பெரிய மீன் கப்பல்கள் கிடையாது. இருந்ததையும் இவர்கள் சரியாகப் பயன்படுத்தாமல் கடற்கரை மணலில் தூங்க விட்டதால் நாங்களே (மத்திய அரசாங்கமே) எடுத்துக் கொண்டோம்.!"

—எப்படி யிருக்கிறது 'நம்ம 'மாட்டுப் பெட்டி' நிர்வாகம்? இது மட்டுமில்லை! மீன் பிடிக்கும் 30 மோட்டார்களில் பெரும் பகுதியை பிள்ளைகள் கண்ணுமூச்சி விளையாடும் வண்ணம் ஓட்டை ஒடைசல் ஆக்கிப் போட்டு விட்டார்கள். காரணம் என்ன? 'கட்டு மரம் கட்டி கிட்டு கஞ்சித் தண்ணி இல்லாமே கடலோரம்' போய்ப் பழக்கப்பட்ட கந்தனுக்கு மீன் பிடிக்கும் படகை கையிலே தூக்கித் தந்துவிட்டால் என்ன செய்வான்? கீழே போட்டுத் தானே உடைப்பான்! கொஞ்சமாவது பயிற்சி தந்திருந்தால் படகை அழிவுக்கு அடகு வைக்காமல் இருந்திருப்பானே!

இவர்களின் அருமையான நிர்வாகத்தைப் பார்த்துக்கொண்ட வட நாட்டரசு பம்பாயிலேயுள்ள தனிப்பட்ட மீன் கம்பெனிகளுக்கெல்லாம் மீன்படகுகள் தருகிறதாம்.

சர்க்காரும், கூட்டுறவு சங்கங்களும் மீன் தொழில் நடத்துகின்ற சென்னைக்குப் படகுகள் இல்லை!

இலாபத்தை தன் வயிற்றுக் கொழுப்பாக்கிக்கொள் ஊற தனிப்பட்ட முதலாளிகளுக்கு படகுகள் எண்ணற்ற முறையில் தரப்படுகின்றவாம்.

பம்பாயிற்குத் தரப்படுவதற்கான காரணம் அங்கு மீன்பிடிக்கும் படகுகள் தங்குவதற்குத் தனித்துறைமுகங்கள் உண்டாம்!

சென்னை ராயபுரத்தில் அம்மாதிரி மீன் பிடிக்கும் துறைமுகத்தைக் கட்ட வசதி யிருக்கிறதாம்!

'மீன் வாங்குங்கள்' என்றுதட்டு வணிகர்களைப்போல் சத்தமிடும் நம் அமைச்சர்கள் மீன் படகுகள் தங்கும் துறைமுகங்களைக் கட்டக் காணோம்! வெறும் கூக்குரலிட்டால் வியாபாரம் நடக்குமா?

ஒரு மீனை வாங்கி செதில் எடுத்து, அறுத்து, மசால் சேர்த்து வறுப்பதைக் காட்டிலும் 'இம்சை பிடித்த வேலை' வேறு இல்லை!

அப்படித்தான் மீன் வாங்கலாம் என்று போனால் மீன் விலையா சொல்லுகிறார்கள்? ஆனைவிலை குதிரைவிலை சொல்லுகிறார்கள். அரைப்படி அரிசியை விட அதிக விலையுள்ள மீனை ஏழை மக்கள் எப்படி வாங்குவார்கள்? கொஞ்சம் சிந்திக்க வேண்டும் நமது அமைச்சர்கள்!

மீனை அதிகமாகப் பிடித்து விலையைக் குறைத்து விற்றால் தானே மீனுக்கு 'நல்ல மார்க்கெட்' ஏற்படும்!

அதிகமாகப் பிடிக்க 'நவீன வசதிகள்' வேண்டும்! அதற்கு மத்திய அரசாங்கத்துடன்தான் போராட வேண்டும்! போராட்டத்துக்குத் தயாரா நம் 'மீன் மார்க்கெட்' சர்க்கார்?

"எதிர்க் கட்சிப் போராட்டத்தை அழிப்போமே தவிர, நாங்களாவது மத்திய அரசாங்கத்தை எதிர்த்து மூச்சு விடுவதாவது? இந்த 'ஜென்மத்தில்' ஏது?' என்று தனக்குத்தானே பேசிக் கொள்வார் நம் அமைச்சர் தலைவர், காமராசர்!

"நீங்கள் ஏன் எதை எதையோ சொல்லி என்னுயிரை வாங்குகிறீர்கள்? ஏதோ புடவை கட்டியதற்காக மந்திரிசபையில் இடம் கிடைத்தது. தென்பாண்டிக்காரி என்பதால் மீன் இலாகா என் தலையில் விழுந்தது! சும்மா சம்பளம் வாங்கிக் கொண்டு தூங்குவதாகப் பிறர் நினைக்கக் கூடாதே என்பதற்காக ஏதோ என் சிறுநாவிற் கெட்டியவரையில் உளறி வைத்தேன்! இத்தனை வளைவு சுளிவு எடுப்பீர்கள் என்று தெரிந்தால் நான் மீனை (மீன் பிரச்சினையைத்) தொட்டிருக்க மாட்டேன்" — என்று நம்மைப் பற்றி லூர்தம்மாள் சலிப்புடன் பேசிக் கொள்கிறார்கள்! ஐயோ பாவம்! இந்த 'வாயில்லாதவரிடம்' மீன் வந்து அகப்பட்டுக் கொண்டதே!

துள்ளிவரும் தமிழ் நடை—அழகை
அள்ளிவரும் புதிய அமைப்பு!

முத்தாரம்

- நேரத்தைப் பொன்னுக்குச் சமம் என்று சொன்னார்கள். அத்தகைய காலத்தை வீணாக்காது வாழ்வது எப்படி? அதற்கு நல்வழி கூறுகிறது......

24 மணி நேரமும் வாழ்வது எப்படி?

- போர்க்களத்திலே புத்தகம் படித்தார்; தேர்தல் களத்திலே தோல்வியைத் தழுவினார்; அந்த விசித்திர மனிதரோ இன்று உலகப் பேரரசு ஒன்றின் தலைவர்! அவரது வரலாற்றைச் சொல்கிறது......

புதுமை சமைத்த புத்தக வணிகன்!

- ரஷ்ய இலக்கியத்திற்கு அழியாத புகழ் சேர்க்கும் கற்பனைக் கருவூலம்! 'நாடோடிக் கதை' வரிசையில் இடம் பெறுகிறது......

"மனை மாட்சி"

- 'பக்குவம்' என்பது என்ன? திருமணமா? அல்லது வயது முதிர்ச்சியா? 'இல்லை' என்று வாதாடும் ஆராய்ச்சிக் கட்டுரை......

பக்குவம் பெற்றீரோ?

- கலையுலகின் தனிப் பெரும் கதாநாயகன் — திக்கெட்டும் புகழ் சேர்த்த திரையுலகின் தீபச் சுடர் — அவனைப் பற்றி மாறன் எம். ஏ. எழுதும்...

மார்லன் பிராண்டோ

இத்தனையும் இதழ் 25-ல்!

ஏப்ரல் முதல் வாரம் கிடைக்கும்!

உலகத்தின் கூரைகளிலே தீவட்டி; ஏந்திநிற்போர் செங்கொடியேந்திகள்!

ஒரு நாட்டில் புயல் எழுந்தது!

இன்னொரு நாட்டில் பூகம்பம் வெடித்தது!

"அடிமை வாழ்வு போதும்! அரை வயிற்றுக் கஞ்சியேனும் சுதந்திரமாக நின்று குடிப்போம்! அருவியென நெய் வார்த்த சோறு தந்தாலும் வேண்டோம்! சுதந்திர தாகம் எழுந்துவிட்டது! சூழ நிற்கும் பகையே! செங்கொடி காட்டும் ஆதிபத்தியப் புகையே! விலகி நில்! எங்கள் வேலுக்கும் உன் விலாவுக்கும் வேலை வைக்காதே!"

—என்ற குரல் எழுந்தது ஒரு நாட்டில்!

"ஏழை நாட்டு மகனே! உன் இருப்பை எல்லாம் குந்தித் தின்கிறன், இன்னொருவன்! அவன் காலபட்டு நசுங்குதடா, நம் இதயம்! தூக்கி நிறுத்திவிடு, புரட்சிக் கொடியை! தூள் தூளாக்கப் புறப்பட்டு விடு, செங்கொடியை! இந்தா! எழிலான சல்லடம்! மாட்டு! இடைக்கச்சை இது! கட்டு! எதிரிகளைத் துண்டு துண்டாக்கும் வீரவாள் இந்தா! ஏந்திப்பிடி! நடடா! நடடா! பகைவரை முன்சுடடா! சுடடா!"

—என்று போர் முரசும் தட்டி, படைவீரர் நடந்திட்டார்! பொங்கிடும் பகையுடன்மோதி, பீறிட்டு எழும் இரத்தத்திலே ஆழ்ந்துவிட்டார், இன்னொரு நாட்டில்!

உலகத்தின் கூரை என்று கூறப்படும் பாமீர் பீடபூமிக்குப் பக்கத்தில் கிடக்கும் இரண்டு நாடுகளில்தான் இந்த முரசொலி கேட்கின்றது. முன்னர் சொன்ன போர்க் குரல், சோவியத் யூனியனுக்கு அடிமையாய்க் கிடக்கும் துர்க்மெனிஸ்தானிலே!

பின்னர் சொன்ன போர்க்களம், செஞ்சீனத்தில் பிடியில் சிக்கித் தவிக்கும் திபேத் நாட்டிலே!

செங்கொடிச் செல்வர்களா இப்படிச் செய்கிறர்கள்? சீழ் பிடித்த புண்ணய், சீரழிந்த பழம் விடாய் இருந்த பாட்டாளி வர்க்கத்திற்குப் புது உலகம் சமைத்துக் காட்டிய புத்துலகச் சிற்பிகளா, சுதந்திரம் வேண்டுகின்ற மக்களின். பச்சை ரத்தத்தைக் குடிக்க 'வெறி' எடுத்துத் திரிகின்றனர்'?—என்று எண்ணும் போது இதயத்தின் மேற்பரப்பிலே சோகம் எழத்தான் செய்கிறது.

முஸ்லிம்கள் பெரும்பகுதி வாழுகின்ற நாடாம் துர்க்மெனிஸ்தான், வெள்ளை ருஷ்யர்களால் ஆளப்படுவதை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறது!

1,87,000 சதுர மைல் பரப்பில், 15 லட்சமே வாழுகின்ற துர்க்மெனிஸ்தான் பிரிந்துபோனல், போகம் இழந்து படுகுழியில் அடையமாட்டோம் என்ற நினைப்போடு விடுதலைக் குரல் எழுப்பியிருக்கிறது!

அட்டெர்க், கெஷிப் — ருட் ஆகிய நதிப்படுகைகளிலே வாழுகிற அந்த முஸ்லிம் மக்கள், வாஷ்கர் நதி யோரத்திலிருந்து ஆளுகின்ற ருஷ்யர்களின் ஆட்சியை எதிர்த்துத் தங்களின் எண்ணத்தை வெளியிட்டிருக்கிருர்கள்.

பட்டிலாடையும், பஞ்சிலாடையும் நெய்து பிழைக்கும் அவர்கள், ரஷ்யர்களின் ஆட்சி தங்கள் நாட்டிலுள்ள 'யூஸ்போய்' எனும் பாலைவனத்தைச் சோலைவனமாக ஆக்க முனைந்திருந்தும்கூட சுதந்திரச் சோலைவனம் தான் எங்களுக்குத் தேவை என்று முழங்குகிறர்கள்,

கி. பி. 1881–லிருந்து அடிமை பூமியாக ரஷ்யர்களுக்கும் பெர்ஷியர்களுக்கும் இருந்து வந்த அந்தநாடு 'விடுதலை வேண்டும்' என்று குரல் கிளப்பியிருக்கிறது, இப்போது!

ஆனல் இந்தக் குரலுக்கு சோவியத் யூனியன் தந்த பதிலென்ன?

கட்டாயமாக ஒரு நாட்டைத் தன் பிடியில் வைத்திருக்கக் கூடாது என்று எகிப்து நாஸருக்கு உபதேசம் புரிகிற குருஷ்சேவ், துர்க்மெனிஸ்தானின் விடுதலைத் தாகத்திற்கு என்ன தந்தார்? விடுதலை இளநீரைத் தரவில்லை! தலைவர்களுக்குச் சிறை, அடக்குமுறை, டாங்குகள் ஊர்வலம் ஆகிய நச்சுநீரைத் தந்திருக்கிறர்.

துர்க்மெனிஸ்தானின் பொதுடைமைக் கட்சியின் செயலாளர், இளம் பொதுடைமையாளர் அமைப்பின் செயலாளர் முதலியோர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். மேற் கூறியவர்களுடன் விடுதலைக் குரல் எழுப்பிய துணை முதலமைச்சர் அகமது சார்யெவ் என்பவரிடமிருந்து பதவி தட்டிப் பறிக்கப்பட்டது. ரஷ்யாவில் பதவி பிடுங்கப்படுகிறது என்றல், சுடுகாட்டுப் பயணம் ஆரம்பமாகிவிட்டது என்றுதான் பொருள்.

துர்க்மெனிஸ்தானின் சுதந்திரக் குரல் திடுமென வெளியாகி மறைந்து விட்டிருக்கிறது, மாயாஜாலங்கள் நிரம்பிய சோவியத்தின் செயல் திறங்களால்! என்ருலும் அந்த சின்னஞ்சிறு பூமியிலே ஊறிக்கொண்டிருக்கிற விடுதலை ஊற்றை உலகில் உள்ள மக்கள் உணர்கிருர்கள்! 'மீண்டும் ஒரு அங்கேரி, பிறக்கலாம்!'—என்று ரஷ்யாவின் ஆயுதங்கள், வெறித்தனம் வாய் ஓரத்தில் வழிய எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன!

முன்னர் சொன்ன நாடு இப்பிருக்க, பின்னர் சொன்ன நாடாம் திபெத்தில், ரஷ்யாவின் தோழன், சிவப்புக்கொடியேந்திய சீன தன் ஆயுதப் படையினை ஏவி, பழங்கால ஆயுதங்களை எடுத்துக்கொண்டு விடுதலை வேண்டிப் போரிடும் திபெத் மக்களின் பிணங்களைப் பாலமாக அமைத்துக்கொண்டு தலாய் லாமாவின் தலையைக் குறிபார்த்துக்கொண்டு வருகின்றது.

30 லட்சம் மக்கள் வாழுகின்ற அந்த மலை நாட்டில் இப்போது நடக்கும் இதே கதை, 1910-லும் நடைபெற்றிருக்கிறது. சீன, ஆதிக்க வெறிகொண்டு திபெத்தின் கழுத்தை நெறிக்க, அந்நாட்டின் இரு கண்கள் பிதுங்கி விழுவதுபோல் தலாய் லாமாவும் பஞ்சன் லாலாவும் பதுங்கிப் பதுங்கி இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஓடி வந்தார்களாம்; பின்னர் வல்லரசுகளின் தலையிட்டால் திபெத் தனி நாடாயிற்றும்!



இப்படிப் 'பரம்பரை வெறி'யைப் புது சமுதாயக் கருத்தினை ஏற்றுக்கொண்ட செஞ்சீனம்கூட விடமுடியவில்லையே என்று எண்ணி வருத்தமுறுகின்றனர், பொது உடைமையின் பால் பற்றுக்கொண்டோர் அனைவரும்!

பொது உடைமைப் புதுக் கொள்கையின் எல்லையிலிருந்து மாறிப்போகின்ற இந்த நாடுகள் மெல்லமெல்ல ஆதிபத்யப் போர்வையைப் போர்த்துக் கொள்ளத்தான் செய்கின்றன,

துர்க்மெனிஸ்தானும், திபெத்தும் சுதந்திரக் குரல் எழுப்புகின்ற அதே நேரத்தில், மாஸ்கோ ரேடியோ 'சீன—ரஷ்யாவின் ஒற்றுமையைப் பற்றி வானளாவப் பேசுகின்றது.' இதற்கென்ன பொருள் என்று விடுதலை விரும்பிகள் உணர்வார்கள். கூட்டு ஏகாதிபத்யத்தின் கொடுங் குரல் இது என்றுதான் உணர்வார்கள்.

இந்த ஒற்றுமையின் மூலம், துர்க்மெனிஸ்தானின் — திபெத்தின் போர்க்குரல்கள் அடக்கப்படலாம்! போர்க் குரலை எழுப்பிய தலைவர்களின் குரல்வளைகள் அறுக்கப்படலாம்! டாங்குகள் உலா வரலாம்! சிறைச்சாலையும் கொலைக் களமும் ஓயாது தன் வேலையைச் செய்துகொண்டே இருக்கலாம்! இவைகளால் மட்டுமே அந்த விடுதலைக் கனல் அணைக்கப்பட்டுவிடாது! விடுதலை யுணர்ச்சிக்கு முன்னலே எந்த ஏகாதிபத்யமும் நின்றதில்லை என்பதை உணரவேண்டும், சிவப்புக் கொடியேந்திய 'புது' ஏகாதிபத்யங்கள்!

'வானம் உடைந்து விழ்ந்தாலும், மண்ணுலகம் இடிந்து தாழ்ந்தாலும், ஊன் திணித்த உடல் தேய்ந்து அழிந்தாலும், மானம் காக்கும் சுதந்திர உரிமையை விடோம்; ஈனமடையோம்!'—என்று கூறிக் கிளம்பி விட்டார்கள், விடுதலை வீரர்கள், வடக்கே!

'புயலுக்குச் சிறுவிளக்கு விண்ணப்பம் போட்டதுவோ! வரிப்புலிக்கு வெள்ளாடு வரவேற்பு கூறிற்ரு? குள்ளநரி குன்றைக் கடிக்க முனைந்ததுவோ'—என எக்காளமிட்டு எதிர்க்கப் புறப்பட்டுவிட்டார்கள், செங்கொடியேந்திய செல்வர்கள்.

விடுதலை எனும் பூகம்பத்தின் வாயை எந்த ஏகாதிபத்யச் சல்லாத் துணியும் மூடிவிட முடியவில்லை, இதுவரை! இன்றுகூட திபெத்திலும் துர்க்மெனிஸ்தானிலும் உறுமுகின்ற விடுதலை எரிமலையை சிவப்புச் சாயமேற்றிய சல்லாத் துணி எப்போதுமே அடக்கிவிட முடியாது.

அது நீல நிறத் துணியாக இருந்தாலும், புரவுன் நிறத் துணியாக இருந்தாலும், மஞ்சள் நிறத் துணியாக இருந்தாலும், சிவப்பு நிறத் துணியாக இருந்தாலும், மூவண்ண கொடித் துணியாக இருந்தாலும், விடுதலை விரும்பும் மக்களின் இதயக் கனலிலே வெந்து தணிந்து பிடி சாம்பலாகிவிடும்! இது வளமுள்ள கற்பனையில் விளைந்த வார்த்தைக் கோவையல்ல; வரலாற்றுத் தீர்ப்பு!

— அடியார்

கக்கனாரின் கவனத்திற்கு:

புதுவளம் கொழிக்குது வடக்கே; பூத்ததும் கருகுது தெற்கே!

இம்மாதம் 19—ம் நாள் சென்னை சட்டமன்றத்தில் நீர்ப்பாசன மான்யக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகையில், அமைச்சர் கக்கன் அவர்கள் தனக்கே உரிய வழக்கமான குரலில் சென்னை மாநிலம் நீர்ப்பாசனத் துறையில் முன்னேறும் 'துரித நிலைமை' குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வேண்டுமென்றே தென்னாடு தேய்கின்றது என்று கூறிவருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியும் உரையாற்றியிருக்கின்றார். சென்னை மாநிலம் உண்மையிலேயே அணைக்கட்டுகள் நிர்மாணிப்பதிலே, கால்வாய்கள் வெட்டுவதிலே, கிணறுகள் தோண்டுவதிலே, ஏரிகளைப் பராமரிப்பதிலே, குழாய்க் கிணறுகள் அமைப்பதிலே வளர்ந்திருக்கிறது எனச் சொல்லி மொத்தமாக சில புள்ளிவிவரங்களையும் வழங்கியிருக்கின்றார். பல்வேறு மாநிலங்கள் இத்துறையில் முன்னேறியிருக்கும் நிலைமையோடு ஒப்பிட்டு, தமிழகத்தின் வளர்ச்சியை நிலைநாட்ட ஏனோ அமைச்சரவர்கள் முயலவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவில் தொழில் வளர்ச்சி, போக்குவரத்து முன்னேற்றம், துறைமுகங்கள் அபிவிருத்தி முதலிய அடுக்கடுக்கான துறைகளில் எங்ஙனம் திராவிடம் வஞ்சிக்கப்பட்டு புறக்கணிப்புக்கு ஆளாகியிருக்கிறதோ அதைப்போலவேதான் நீர்ப்பாசனத் துறையிலும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளது என உறுதியாகக் கூறலாம்.

கடந்த பதினோரு ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் வடநாட்டு ஏகாதிபத்திய சர்க்கார் மிக மோசமான வகையில் நீர்ப்பாசனத் துறையில் தமிழகத்தைப் புறக்கணித்திருப்பதோடு, ஆங்கிலேய ஏகாதிபத்தியமும் தன்னுடைய கைவரிசையைக் காட்டியிருக்கின்றது. சென்னை மாநிலத்தையும், உத்திரப் பிரதேசத்தையும் நீர்ப்பாசன வளர்ச்சியில் ஒப்பிட்டு, விளக்கமான நிலையை உணர்த்தக்கூடிய வகையில் ஒரு புள்ளிவிவரம் முதல் ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் காணக்கிடக்கின்றது.

கீழே கண்ட விவரத்திலிருந்து, உத்திரப் பிரதேசம் பல புதிய அணைக்கட்டுகளை நிர்மாணித்து கால்வாய்மூலம் பாசனம் செய்து 25 ஆண்டுகளில் புதியதாக 18 லட்சம் ஏக்கர் அதாவது 84 சதவிதம் நீர்ப்பாசனத் துறையில் வளர்ந்திருக்கிறது, ஆனால் அதே காலஅளவில் சென்னை மாநிலம் நாலரை லட்சம் ஏக்கர் அதாவது 12 சதவிதம்தான் நீர்ப்பாசனத் துறையில் முன்னேறியிருக்கும் சோக நிலைமையைப் படம் பார்ப்பதுபோல் தெரிந்து கொள்ளுகின்றோம். அத்துடன், கிணறுகள், குளங்கள் இவைகள் மூலம் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு உத்திரப் பிரதேசம் பாசனப் பகுதிகளைப் பெருக்கியிருக்க, சென்னை மாநிலம் இருந்ததையும் இழந்திருக்கும் பரிதாபத்தையும் காண்கின்றோம்.

தமிழகத்து மாமன்னர்கள் இந்தக் காலத்து நிபுணர்களும் வியந்து பாராட்டிப் பெருமைப்படுமளவுக்கு பல்வேறு அணைக்கட்டுகளை உருவாக்கியுள்ளனர். தமிழகம் நீர்ப்பாசனத் துறையில் சீருஞ் சிறப்புமாய் விளங்கிய நேரத்தில், வடநாடு வாட்டமுற்று, திட்டமிட்டு முன்னேறும் வாய்ப்பின்றி வதங்கியது. ஆனால், வெள்ளையரின் ஆட்சிக் காலத்தே, நிலைமை மாறி தென்னகம் வளர்ச்சி குன்றவும், வடநாடு விரைவில் வளரவுமான நிலைமை, பாசனத் துறையில், சர்க்காரின் பொருந்தாக் கொள்கையால் உருவாகிவிட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படுவதற்கு முன்னால்—1951-ம் ஆண்டில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதுமாக, 2770 லட்சம் ஏக்கர் சாகுபடி நிலமாகும். இதில், நீர்ப்பாசனம் மூலம் பயிர் விளையும் நிலங்கள் 500 லட்சம் ஏக்கர்கள். விளக்கமாகச் சொன்னால், மொத்த சாகுபடி நிலத்தில், 18 சதவீதம் நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் நடைபெறுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு வெகு முக்கியம் அளிக்கப்பட்டது. எனவே, ஏராளமான புதிய அணைக்கட்டுகள் உருவாக, கிணறுகள் தோண்ட, குழாய்க் கிணறுகள் அமைக்க, ஏரிகள் செம்மைப்படுத்தப்பட திட்டங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பரக்க இடம் பெற்றன. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக 62 லட்சம் ஏக்கரும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாய் 100 லட்சம் ஏக்கரும் புதிதாக பாசனவசதி பெற வேண்டும் என்பது திட்டத்தின் எல்லையாகும். எனவே, முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 160 லட்சம் ஏக்கர் இந்தியத் துணைக்கண்டம் பூராவிலும் புதிய நீர்ப்பாசனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

கோசி அணைக்கட்டுத் திட்டம், கொய்னா அணைக்கட்டுத் திட்டம், சாம்பல் அணைக்கட்டுத் திட்டம், ரீகண்ட் அணைக்கட்டுத் திட்டம் இப்படி அடுக்கடுக்கான பெரிய திட்டங்கள் வடநாட்டில் உருவாகின. குழாய்க்கிணறுகள் 1951க்கு முன்னால் இந்தியா அனைத்திலும் 2500 ஆகும். இதில், 2300 குழாய் கிணறுகள் உத்திரப் பிரதேசத்திலேயே இருக்கின்றன. 20 லட்சம் ஏக்கர் புதிய நீர்ப்பாசனம் பெற்றுப் பயனடைய ரூ. 25 கோடி செலவில் சுமார் 6000 குழாய் கிணறுகள் அனைத்தும் வட நாட்டிலேயே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்டன. இப்படியாக முதல் திட்டம் வடநாட்டின் விவசாயத்தின் வளப்பத்தை வளர்த்துச் சிறப்பாக்கியது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமோ தென்னகம் பாலைவனமாக, வடநாடு சோலைவனமாக மாற நிறைவேறிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 400 கோடி ரூபாய் நீர்ப்பாசனத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரூபாய் 191 கோடி செலவில் 10 கோடி ரூபாயிலிருந்து 30 கோடிவரை அடங்கும் 10 அணைக்கட்டுகள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உண்டு.

5 கோடியிலிருந்து 10 கோடி வரை செலவாகும், 7 அணைக்கட்டுகள் உருவாக 54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

35 அணைக்கட்டுகள் உருவாக 85கோடி ரூபாய் கூடுதல் செலவில் 5 கோடிக்கு மேற்படாமலும் ஒரு கோடிக்குக் குறையாமலும் செலவாகும் முறையில் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாகச் செலவாகும் திட்டங்கள் 143-க்கும் மொத்தச் செலவு 46 கோடி ரூபாய்.

இப்படி 195 அணைக்கட்டுகளுக்கு 376 கோடி ரூபாய் செலவாகும் வகையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகைகள் உள்ளன.

20 கோடி ரூபாய் செலவில் 3581 குழாய்க் கிணறுகளும் உருவாகும்.

வெள்ளத் தடுப்பிற்காக சுமார் 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரிய அணைக்கட்டுகளான பக்ரா நங்கல், இராகுட், தாமோதர் பள்ளத்தாக்கு, ஊகய், மாயூர்காசி, கக்ராபார், நர்மதா, கங்கபாதி முதலியனவெல்லாம் வடநாட்டிலே நிர்மாணிக்கப்படுகின்றன. 3581 குழாய்க் கிணறுகளில் 3000க்கு மேலே வடநாட்டில் உருவாகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் பாசனத் துறையில் வடநாடு துரிதமாய் வளர அடிப்படையாக அமைந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், மேலும் வட மாநிலங்கள் முன்னேற பலமான கட்டிடத்தை உருவாக்குகின்றது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேறினால், சுமார் 200 லட்சம் ஏக்கர் புதிய நீர்ப்பாசனத்திற்கு வரும். எனவே, இரண்டு திட்டங்களிலுமாக இந்தியா முழுதும் சுமார் 350 லட்சம் ஏக்கர் புதிய நீர்ப்பாசனத்திற்கு வருகின்றது. இதிலிருந்து, இந்தியா இரண்டு திட்ட காலத்தில் 1951—61முடிய முக்கால்பங்கு பாசனத் துறையில் வளர்ச்சி பெறுகின்றது. இந்த முன்னேற்றம் எளிய வளர்ச்சியல்ல; பிரமாண்டமான வெற்றி என்றே குறிப்பிடலாம். இது இந்தியா பூராவுக்குமான நிலைமை என்பதை நாம் நினைவில் வைத்தாக வேண்டும்.

இப்பொழுது தமிழ்நாடு மட்டிலும் பாசனத் துறையில் இரண்டு திட்ட காலத்திலும் எப்படி வளர்ந்தது என்பதை, நாம் தெரிந்தாக வேண்டும்.

நீர்ப்பாசன மான்யக்கோரிக்கையில் சென்னை சட்டமன்றத்தில் கக்கன் பேசுகையில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 28·91 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு 4,64,200 ஏக்கர் நிலம் புதிய நீர்ப்பாசனத்திற்கு தமிழகத்தில் வந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1234 லட்சம் ரூபாய் செலவில், 5 லட் ஏக்கர் புதுப் பாசனத்திற்கு வரும் என்றும் விளக்கியுள்ளார். எனவே, இரண்டு திட்டங்களிலுமாக 41 கோடி ரூபாய் செலவாகி 9,64,200 (ஏறக்குறைய பத்து லட்சம்) ஏக்கர் தமிழகத்தில் புதிதாக நீர்ப்பாசனம் பெறும் எனத் தெரிகிறது.

இச்சமயத்தில் ஒன்றை நாம் தெரிந்து கொள்ளுவது நல்லது. தமிழ் நாட்டில் 1951-ம் ஆண்டில், திட்டம் துவக்கப்படாத நேரத்தில் 50 லட்சம் ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்றிருந்தது. எனவே, இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படுவதால் ஐந்திலே ஒரு பங்கு—தமிழ்நாடு பாசனத் துறையில் வளர்ந்திருக்கின்றது. ஆனால், நாம் முன்பு கண்டிருப்பதுபோல தமிழ்நாட்டையும் உள்ளடக்கிய இந்தியா முக்கால்பங்கு பாசனத் துறையில்

[தொடர்ச்சி பக்கம்—8]

(ஏக்கர் இலட்சக் கணக்கில்)

ஆண்டுகள்	கால்வாய்கள்மூலம் பாசனம்		கிணறுகள் போன்ற தனியார் முயற்சி	
	உத்திரப் பிரதேசம்	சென்னை	உத்திரப் பிரதேசம்	சென்னை
1920—25	21·5	38·0	51·8	50.7
1925—30	26.1	39·5	49·8	46·9
1930—35	31·5	38·8	50·0	47·7
1935—40	36·3	39·1	54·0	44·1
1940—45	39·5	42·4	52·5	47·6

வடக்கே வாழும் 'பத்திரிகை'ப் புலிகள்!

ஆலை அரசர்களும், தொழில் துறையில் தன்னிகரற்று ஆட்சி செய்யும் பணத் திமிங்கிலங்களும், கோடி கோடியாகப் பொருள் குவிக்கும் குபேரர்களும்—இந்திய உபகண்டத்தின் வட பகுதியில் குவிந்து கிடக்கிறார்கள்!

நாட்டை வேட்டைக் காடாக்கி, தாம் மட்டுமே தின்று கொழுக்கும் அந்த வரிவேங்கைப் புலிகளை வளர்த்து விட்ட தோடுமட்டுமல்ல; கேவலத்திலும் கேவலம், அவைகளின் குகைக்குள் புகுந்து 'நன்கொடை'யைப் பெற்று வருகிற நிகழ்ச்சிகள், கூட ஆட்சியினரின் அன்ருட அலுவல்களில் செந்நிற எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு வருகின்றன!

இந்த அவமானக் கதையைத்தான் 'சோஷலிச பாணி' என்ற சோபித முடிவோடு எழுதிக் கொண்டிருக்கிறார்கள், பணம் காய்க்கும் மரத்திலே நிழலுக்குச் சாயும் செங்கோலேந்திகள்!

இந்த வணிக வேந்தர்கள் குறிப்பிட்ட துறைகளை மட்டும் தங்கள் பாதத்தடியிலே மிதித்துக் கொண்டிருக்கவில்லை; சர்க்காரின் துணிவோடு, 'லாபம்' எங்கிருந்து கிடைத்தாலும், அங்கெல்லாம் 'ராஜா'க்களாகத்தான் வீற்றிருக்கிறார்கள்.

உதாரணமாக, பத்திரிகைத் துறையில்கூட வடக்கத்தி முதலாளிகளின் ஆதிக்கம் வியக்கத்தக்க அளவில்—விழிகளில் நீர் நிரப்பும் வகையில் செலுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஒவ்வொருவருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட அநேக ஏடுகள் சொந்தமாக இருக்கின்றன.

"டைம்ஸ் ஆப் இந்தியா" (பம்பாய்)
"டைம்ஸ் ஆப் இந்தியா" (டெல்லி)
"ஈவினிங் நியூஸ்"
"இந்தியன் நியூஸ் கிராணிகள்"
"நியூ பாரத் டைம்ஸ்" (பம்பாய்)
"நியூ பாரத் டைம்ஸ்" (கல்கத்தா)
"நியூ பாரத் டைம்ஸ்" (குஜராத்தி மொழி)
"சத்யயுக்" (வங்காள மொழி)
"நேஷனல் கால்"
"சண்டே நியூஸ்"
"தர்மயுக்"
"இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா"
"பிலிம்பேர்"

—மேற் கண்ட 13 ஏடுகளுக்கும் ஒரே ஒருவர்தான் சொந்தக்காரர் என்பதை நம்பத்தான் வேண்டும்—"டால்மியா" என்ற 'பணபூதம்'தான் இவைகளைக் கட்டியாளுகிறது!

கீழே கண்டவை "பிர்லா"வுக்குச் சொந்தமானவை:

"ஹிந்துஸ்தான் டைம்ஸ்" (டெல்லி)
"ஹிந்துஸ்தான்" (இந்தி மொழி)
"ராஷ்டிரவாணி" (,,)
"சர்ச் லைட்" (பாட்னு)
"லீடர்" (அலகாபாத்)
"பாரத்"
"ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட்" (டெல்லி)

இந்த இருவர்மட்டுமல்ல; வடக்கேயிருந்து வந்து சென்னையிலே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறாரே "கோயங்கா"—அவர் நடத்தி வருகின்ற ஏடுகளின் பட்டியல் இது:

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" (பம்பாய்)
"இந்தியன் எக்ஸ்பிரஸ்" (சென்னை)
"இந்தியன் எக்ஸ்பிரஸ்" (டெல்லி)
"தினமணி" (சென்னை)
"தினமணி" (மதுரை)
"தினமணி கதிர்"
"ஸ்கிரீன்"
"ஆந்திர பிரபா"
"ஆந்திர பிரபா வீக்லி"
"லோக சட்டா" (மராத்தி மொழி)

—இந்த ஏடுகள் அனைத்திற்குமே அரசாங்க விளம்பரங்கள் எலலாம் எந்தத் தடையுமின்றித் தரப்படுகின்றன; காரணம் இம்மூவரும் எக்காரணம் கொண்டும் சர்க்காரைத் தாக்காமல் தங்கள் பாதையை அமைத்துக் கொண்டு போய்விடுகிறார்கள்!

எழுதுகோலின் பாய்ச்சலுக்குத்தான் உலகச் சர்வாதிகாரிகள் அனைவருமே பயந்ததாகச் சரித்திரம் இருக்கிறது! நம்மை ஆளவந்தவர்கள் மேற்கண்ட பணமுதலைகளின் பக்கம் சாய்ந்தே இருப்பதற்கும் இதுதான் காரணமோ? ∴

புதுவளம்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

நன்கு முன்னேறி இருக்கின்றது.

தமிழகத்தைப் போலவேதான், திராவிடத்தின் வேறு பகுதிகளான ஆந்திரா, கருநாடகம், கேரளா ஆகியவைகளும் பாசனத்துறை வளர்ச்சியில் பெரிதும் பின்தங்கியுள்ளன.

அது மட்டுமல்ல;

உத்திரப் பிரதேசத்தில் ஒரு விவசாயத் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக விவசாயத் துறையில் 255 நாட்களுக்கும், வேறு வாய்ப்புகளில் 34 நாட்களுக்கும்—ஆக 289 நாட்களுக்கு வேலை கிடைக்கின்றது. ஆனால் தென்னகத்து விவசாயத் தொழிலாளிக்கு முறையே 160 நாட்கள், 21 நாட்கள், ஆகக் கூடுதலாக ஆண்டொன்றுக்கு 181 நாட்களுக்கே வேலை கிடைக்கின்றது.

உத்திரப் பிரதேசத்தில் 289 நாட்கள்; தென்னகத்தில் 181 நாட்கள்!

உத்திரப் பிரதேசத்தில் விவசாயத் தொழிலாளி ஒருவனின் குடும்ப வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 551. இங்கே ரூ. 382 தான்!

உத்திரப் பிரதேசத்தில் விவசாயத் தொழிலாளியின் தனி நபர் வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 131; இங்கே ரூ. 91.

மேலே தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து உத்திரப் பிரதேச விவசாயத் தொழிலாளிக்குக் கூடுதலான நாட்களுக்கு வேலை கிடைக்கின்றது. எனவே அதிகமான ஊதியம் பெறுகின்றான். தென்னாட்டு விவசாயத் தொழிலாளிக்குக் குறைவான நாட்களுக்கே வேலை இருக்கின்றது. எனவே, கொஞ்ச ஊதியமே அடைய முடிகின்றது. ஆக, வடநாட்டு மக்களுக்கு வளமான வாழ்வு; திராவிடர்களுக்கு வரண்ட வாழ்வு!

வடக்கே வளமை; தெற்கே வறுமை!

அங்கே ஆனந்தம்; இங்கே கண்ணீர்!

இதற்கான முக்கிய, தெளிவான காரணம், வடக்கின் வஞ்சகமும், தெற்கின் அடிபணியும் தன்மையும்தான்!

வட நாட்டு மக்களென்ன, உலகத்தில் உள்ளோரனைவருமே பாங்குடன் வாழ்வதிலே பெருமகிழ்ச்சிதான். ஆனால் ஒரு பகுதியினரின் வாழ்வு, வளம், முன்னேற்றம் சூறையாடப்பட்டு, இன்னொரு பகுதியினர் பெருவாழ்வில், அதி முன்னேற்றத்தில் திளைப்பதென்ருல் உரிமை உணர்ந்தவர்கள் ஒருக்காலும் இந்த அநீதியை ஒப்பவே மாட்டார்கள். ஆனால், இன்றைய தினம் நாம் காணுவது என்ன?

வட நாடு வளரவுமில்லை; தென்னுடு தேயவுமில்லை எனப் பலர் ஆவேசத்தோடு அலறுகின்றார்கள். உண்மை உரைப்போர் உதாசீனப்படுத்தப்படுகின்றனர். இந்நிலையில், திராவிடர்கள் தங்களது உரிமைகளை உணர்ந்து உத்வேகத்துடன் கிளர்ந்து பாதுகாக்கத்தொடங்கிவிட்டனர்.

ஆளவந்த அமைச்சர் பெருமக்களோ தங்கள் வாழ்வே பெருவாழ்வு எனக் கொண்டு வாயிருந்தும் ஊமைகளாய், கண்ணிருந்தும் குருடர்களாய், திறனிருந்தும் தெளிவற்றவர்களாய் உழலுகின்றனர். அவர்கள் கடமையை உணர வேண்டும். ஆண்டாண்டு காலமாய் வட நாடு பாசனத் துறையில் வளர்ந்திருக்கிறது; அது போதும். தற்சமயம் தென்னுடு வளர வாய்ப்பளியுங்கள். அதற்கான பண வசதி செய்து தாருங்கள்—இப்படி உரிமையை நிலைநாட்ட உணர்வுடன் ஆளவந்தவர்கள் குரலெழுப்ப வேண்டாமா? வடநாடு வளர தென்னுடு தேய்ந்தது போதும். தேய்ந்த அளவு விரைவில் முன்னேற, வளர்ந்த வட நாடே, வகை செய் என முழங்க வேண்டாமா? இந்த நல்ல பணியை ஆற்ற வேண்டியவர்கள், ஆற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோரைத் தூற்றத் தொடங்குகின்றார்கள். ஆளவந்த காங்கிரஸ்காரர்கள் வட நாட்டுக் கொள்ளைக்காரர்களுக்கு துதி பாடுகின்றனர்.

அமைச்சர் கக்கனே இக்கதிக்கு ஆளாக்கிய இந்திய சர்க்காருக்கு ஏஜெண்டாகிறார். பசப்புகின்ற பந்துவுக்குப் பாராட்டுரை வழங்குகின்றார். இந்தப் போக்கில் தென்னாட்டிற்கான புதிய அணைக்கட்டுத் திட்டங்கள் உருவாவதெங்கே? திராவிடம் முன்னேறுவது எப்பொழுது?

கக்கன் அவர்கள் பேசுகையில் வெள்ளையனை விரட்டிய வீரப் பிரதாபத்தை விளக்கியிருக்கிறாரே தவிர, தென்னகம் விவசாயத்தில் முன்னேற மார்க்கம் சொல்லவில்லை. ஆட்டிப் படைக்கும் அதிகாரங்கள் குன்றுபோல் டில்லியில் குவிந்திருக்கையில் கக்கன் என்ன செய்ய இயலும்? எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் திட்டங்கள் தீட்ட உரிமை வேண்டும்; அதிகாரம் அனைத்தும் நம் கையில் இருக்க வேண்டுமென எடுத்துக் கூறி வருகின்றோம். எல்லாத் துறைகளிலும் தென்னகம் கேவலமாக இருக்கும் நிலைமையை விளக்குகின்றோம். இதை ஆதாரங் காட்டி மறுக்க இயலாதவர்கள் கேலி பேசுகின்றனர். வீராப்புப் பேசுவோர் விளக்கம் பெறட்டும்! துவளுபவர்கள் நிமிர்ந்து நிற்கட்டும்! திராவிடம் விடுதலை பெறட்டும்! தீமையெலாம் தீய்ந்தொழியட்டும்! ∴

—சி. ஜம்பு

என்னைப் பற்றி...

மு. கருணாநிதி

எழுதும் சுவைமிக்க சுயசரிதம்—
தித்திக்கும் தேன்தமிழில்!

"கலைஞன்"

1-4-59 இதழில் ஆரம்பமாகிறது!

கலைஞன் :: சென்னை—14

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு